செ.வெ.எண்.320/2009, நாள்:29.09.2009

## முதலமைச்சர் கலைஞர் காப்பீட்டு திட்ட அடையாள அட்டைக்கான புகைப்படம் எடுக்கும் இடங்கள் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் தகவல்

உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான முதலமைச்சர் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 26.09.2009 அன்று ஆலப்பாக்கம், அஞ்சூர், அப்பூர், ஆத்தூர், செட்டிபுண்ணியம், குருவன்மேடு, குண்ணவாக்கம், குமிழி, கொண்டமங்கலம் ஆகிய கிராமங்களிலும், 28.09.2009 அன்று கல்வாய், காயரம்பேடு, கீரப்பாக்கம், கருநிலம், காரணைபுதுச்சேரி, கொளத்தூர் மண்ணிவாக்கம் ஆகிய கிராமங்களிலும், 29.09.2009 அன்று மேலமையூர், நெடுங்குன்றம், நல்லம்பாக்கம், ஓழலூர், பட்ரவாக்கம், பழவேலி என்ற கிராமத்திலும், 30.09.2009 அன்று பாலூர், புலிப்பாக்கம், பெருமாட்டுநல்லூர், பெரியபொத்தேரி, சிங்கபெருமாள் கோயில் ஆகிய கிராமங்களிலும் உறுப்பினர் விவரப் பதிவு செய்வதற்காக காப்பீட்டு நிறுவனம் சார்ந்த குழுவினர் வருகை தர உள்ளனர். இத்திட்டத்தின் கீழ் அமைப்புச்சாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்கள், தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள், விவசாயிகள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) திட்ட உறுப்பினர்கள் மற்றும் ஆண்டு வருமானம் ரூ.72,000க்கு குறைவாக உள்ள குடும்பத்தினர் இத்திட்டத்தில் உறுப்பினராகி பயன்பெறலாம்.

இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு பொதுமக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்